**உத்திரமேரூர் பேரூர்**

**அமைப்பாளர் :** பி.வி.அன்புராஜா, 41, செங்குந்தர் பிள்ளையார் கோயில் தெரு, உத்திரமேரூர்.

துணை அமைப்பாளர்கள் : (1) அ.பெ.பரணி, 25, வாழைத் தோட்டம் தெரு, உத்திரமேரூர். (2) த.அஸ்வின்ராஜ், 17, எண்டத்தூர் சாலைத் தெரு, பட்டஞ்சேரி, உத்திரமேரூர். (3) ந.ராஜேஷ்கன்னா, 3, ஏ.பி.சத்திரம், வாடாநல்லூர் (அ), உத்திரமேரூர். (4) ப.ராஜவேல், 139, கருணீகர் தெரு, உத்திரமேரூர்.

**கருங்குழி பேரூர்**

**அமைப்பாளர் :** டி.ஜி.எஸ்.கார்த்திகேயன், 13, பெரிய நகர், மலைப்பாளையம், கருங்குழி, மதுராந்தகம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.ம.தமிழ்மாறன், 2, மகாலட்சுமி நகர், மேலவலம், கருங்குழி, மதுராந்தகம். (2) ச.ஸ்ரீதர், 7, ஞானாம்பிகைப் பேட்டை, கருங்குழி, மதுராந்தகம். (3) ஜி.ஞானபிரகாசம், 89, பங்களா காலனி, மலைப்பாளையம், கருங்குழி.

**அச்சிறுப்பாக்கம் பேரூர்**

**அமைப்பாளர் :** பா.சிவசங்கரன், 1, காந்தி நகர், கிழக்கு ஜி.எஸ்.டி. சாலை, அச்சிறுப்பாக்கம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.முகமது இப்ராஹிம், 41, நடுத்தெரு, அச்சிறுப்பாக்கம். (2) க.சுப்பிரமணியன், 22, முதல் தெரு, வெங்கடாபுரம், அச்சிறுப்பாக்கம். (3) இரா.சூர்யா, முத்துமாரியம்மன் கோயில் தெரு, மலை நகர், அச்சிறுப்பாக்கம் (அ), மதுராந்தகம். (4) ம.ரஞ்சித்குமார், வண்டிக்குப்பம் காலனி, அச்சிறுப்பாக்கம்.

**இடைக்கழிநாடு பேரூர்**

**அமைப்பாளர் :** டி.முகமது ரிப்பாய், பள்ளிவாசல் தெரு, கடப்பாக்கம் (அ), செய்யூர், செங்கல்பட்டு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.ஸ்ரீராமுலு, நல்லூர், 1–வது தெரு, கடப்பாக்கம் (அ), செய்யூர், செங்கல்பட்டு. (2) வினோத்குமார், ஆலம்பரைக் குப்பம். கடப்பாக்கம், செய்யூர், செங்கல்பட்டு. (3) ச.தினேஷ், 17, முதல் தெரு, நைனார்க் குப்பம் (அ), செய்யூர், செங்கல்பட்டு. (4) அ.அப்துல் மாலிக், பனையூர் (அ), செய்யூர், செங்கல்பட்டு.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 21–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

## மாநில அரசுகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஒன்றிய அரசு நடத்துகிறது:

# கூட்டாட்சித் தத்துவமும் - மாநில சுயாட்சியும் நீர்த்துப் போய்விட்டன!

## பீகாரில் நடைபெற்ற – அரசமைப்பின் 75–வது ஆண்டு விழாவில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

பாட்னா, ஜன. 22 –

பீகாரில் நடைபெற்ற அரசமைப்பின் 75வது ஆண்டு விழாவில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசுகையில் மாநில அரசுகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஒன்றிய அரசு நடத்துகிறது என்றும், கூட்டாட்சித் தத்துவமும், மாநில சுயாட்சியும் இந்த ஒன்றிய அரசால் நீர்த்துப் போய்விட்டது என்றும் குறிப்பிட்டார்.



**அரசமைப்பின் 75வது ஆண்டு விழா :-**

அரசமைப்பு மதிப்புகளை வலுப்படுத்துவதில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற அமைப்புகளின் பங்களிப்பு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களின் உரை வருமாறு :–

இந்தியாவின் ஒரு குக்கிராமத்தில் ஏழை, எளிய, விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வகையில், எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ரத்தம் சிந்தி இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராடிய அனைத்து தியாகிகளுக்கும் அஞ்சலி செலுத்த விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான குழு இந்திய அரசமைப்பை உருவாக்கியது. இந்தியாவின் வரலாற்று மற்றும் புவியியல் நிலைமைகளுக்கு ஏற்றவாறும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற குறிக்கோளுடன் எதிர்காலச் சூழ்நிலைகளைச் சமாளிக்கும் வகையிலும் இந்திய அரசமைப்பை அவர் வடிவமைத்தார்.

**சமூக நீதிக்காகப் போராடிய தமிழ்நாடு**

சுதந்திர இந்தியாவிற்கு பின் அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் சமூகநீதிக்கான திருத்தமாகும். தமிழ்நாடு அந்த சமூக நீதிக்காகப் போராடி, அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற பெரும்முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றத்தில் இடஒதுக்கீடு சட்டத்தில் முதல் திருத்தத்தை கொண்டு வந்து சமூகநீதியின் காவலராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு.

தொடர்ந்து, பெரும்பாலான திருத்தங்கள் மக்கள் நலனுக்காகவே செய்யப்பட்டுள்ளன என்பது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும் என முன்னாள் பிரதமர் ஏ.பி.வாஜ்பாய் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பொன் விழா கொண்டாட்டத்தில் பேசிய போது இதனை உறுதிப்படுத்தினார்.

இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளுக்கும் அரசமைப்புச் சட்டம் சமமான வாய்ப்பை வழங்கியிருந்தாலும், சமீபத்தில், நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்கள் இந்தியில் தலைப்புகளைக் கொண்டுள்ளன. அந்த மசோதாக்கள் இந்தியில் இருந்தால், அந்த மசோதாவில் உள்ள சாராம்சங்கள் இந்தி பேசாத மாநில மக்களை எப்படி சென்றடையும்? இச்செயலானது அனைத்து மசோதாக்கள், சட்டங்களிலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்திய அரசமைப்பின் பிரிவு 348ஐ மீறுவதாகும்.

மாநில சுயாட்சி கேள்விக்குறியாகிவிட்டது. கூட்டாட்சி தத்துவமும் நீர்த்துப் போய்விட்டது. ஒன்றிய அரசு மாநில அரசுகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கும் போக்கு அதிகரித்துவருகிறது. ஒன்றிய அரசு அதிகாரம் மற்றும் நிதிப் பங்கீட்டில் பாகுபாடு காட்டுவது மாநில அரசுகளுக்கு பெரும் தடையாக உள்ளது. நவம்பர் 25, 1949, அன்று அரசியலமைப்புச் சபையின் விவாதங்களின் அடிப்படையில் பார்த்தால், மாநிலங்கள் தங்கள் சட்டமன்ற அல்லது நிர்வாக அதிகாரத்திற்காக எந்த வகையிலும் ஒன்றியத்தை சார்ந்திருக்க தேவையில்லை எனத் தெரியவருகிறது. மேலும், இந்த விஷயத்தில் ஒன்றியமும் மாநிலங்களும் சமமானவை ஆகும்.

**கவலையளிக்கும் ஆளுநர்களின் செயல்பாடுகள்**

சமீபகாலமாக, அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்படாத பல விஷயங்களில் ஆளுநர்கள் தேவையில்லாமல் தலையிடும் போக்கு அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகள் கவலை அளிப்பதாக உள்ளன.

அரசமைப்புச் சட்டத்தின் 176(1) பிரிவின்படி, ஒவ்வொரு ஆண்டும் சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்தில், ஆளுநர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் உரையாற்றுவார். ஆனால், பதவியேற்றதிலிருந்து, தற்போதைய தமிழ்நாடு ஆளுநர் அரசியலமைப்புச் சட்டவிதிகளை கேலிக்கூத்து ஆக்கி வருகிறார்.

2023 ஆம் ஆண்டில், ஆளுநர் தன்னால் ஒப்புதல் அளிக்கப்பட்ட உரையில் பல முக்கியத் தலைவர்களின் பெயர்களையும், திட்டங்களையும் புறக்கணித்துவிட்டு தனது சொந்த வாக்கியங்களை சேர்த்து வாசித்தார். மேலும், உரையை முடித்த பிறகு, பேரவை நடவடிக்கைகள் முடித்து, தேசியகீதம் பாடும் போது அதற்கு மரியாதை செலுத்தாமல், அதற்கு முன்பே அவையை விட்டு வெளியேறியச் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாடு மக்களையும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், நூற்றாண்டு பழமையான தமிழக சட்டமன்றத்தையும் ஆளுநர் தொடர்ந்து அவமதித்து வருகிறார். தமிழகம் மட்டுமின்றி எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும் இது போன்றச் செயல்கள் ஆளுநர்களால் அதிகளவில் நடைபெற்று வருவது வேதனையாக உள்ளது.

மாநில சட்டங்களால் உருவாக்கப்பட்ட மற்றும் மாநில அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட மாநில பல்கலைக்கழகங்களின் மீது யுஜிசியின் இந்த தன்னிச்சையான அதிகாரம், அரசியலமைப்பு கூட்டாட்சி ஏற்பாட்டை முற்றிலும் மீறுவதாகும்.

**ராஜமன்னார் ஆணையம்**

ஐயா, மத்திய–மாநில உறவுகள் குறித்து அமைக்கப்பட்ட ராஜமன்னார் ஆணையம், சர்க்காரியா ஆணையம், வெங்கடாச்சலியா ஆணையம் மற்றும் புஞ்சி ஆணையம் போன்ற பல்வேறு ஆணையங்கள் ஆளுநரை நியமிக்கும்போது முதலமைச்சருடன் கலந்தாலோசிப்பது குறித்து பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

மேலும், புஞ்சி ஆணையம் பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநரை நியமிக்கும் மரபு ஒழிக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தது. மேலும் அந்த ஆணையம், ஒரு தீர்மானத்தின் மூலம் ஆளுநரை நீக்க மாநில சட்டமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் (அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 61 இன் படி ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் செயல்முறையைப் போன்றது) எனவும், மேலும், அரசியலமைப்பின் பிரிவு 156 இல் இருந்து "ஆளுநர் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் போது பதவி வகிப்பார் என்ற சொற்றொடரை நீக்க வேண்டும்" எனவும் பரிந்துரைத்தது.

**மசோதாக்களுக்கு ஒப்புதல் - ஆளுநர்களுக்கு காலக்கெடு**

ஐயா, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை 106 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆளுநர்கள் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான காலக்கெடுவை நிர்ணயிப்பதற்கான அரசமைப்புத் திருத்தம் குறித்து சிம்லா மற்றும் மும்பையில் நடைபெற்ற மாநாடுகளில் நான் முன்பு தெரிவித்த கருத்துக்களை மீண்டும் வலியுறுத்தும் அதே வேளையில், ஆளுநரின் பங்கு குறித்து பல்வேறு குழுக்களின் பரிந்துரைகளை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். மேலும், நமது அரசமைப்பின் அடிப்படைக் கொள்கைகளால் எதிர்பார்க்கப்படும் ஆரோக்கியமான ஜனநாயகம் செழிக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தை பொருத்தமான முறையில் திருத்துவதற்கான எனது கருத்துக்களை இந்த மாநாடு அங்கீகரிக்க வேண்டும் என்று மனதார கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒரு பாலமாகச் செயல்படுவதற்குப் பதிலாக ஆளுநர்கள் தங்களது அரசமைப்பு கடமைகளை நிறைவேற்றவில்லை என்ற காரணத்திற்காக ஆளுநரின் பங்கு குறித்த பல்வேறு ஆணையங்களின் பரிந்துரைகள் இங்கே முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன. ஆளுநரின் அரசமைப்பு மீறல்களால், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தனது சமூக நலத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தவிப்பதை இந்த மதிப்புமிக்க கூட்டம் புரிந்துகொள்ளும் என்று நான் மனதார நம்புகிறேன். சட்டமன்றத்தின் ஒரு பகுதியாக இருக்கும் ஆளுநரின் இத்தகைய நடவடிக்கைகள், அரசமைப்பு விழுமியங்களை வலுப்படுத்துவதில் சட்டமன்ற அமைப்புகளின் பங்களிப்புகளை உண்மையில் தடுக்கின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுநர் குறித்து பேசியபோது இடையிடையே குறுக்கிட்ட மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் ஆளுநர் குறித்து பேசக்கூடாது எனவும், ஆளுநர் குறித்து சட்டப் பேரவைத் தலைவர் பேசியது நிகழ்ச்சி குறிப்பில் பதிவாகாது எனவும் தெரிவித்தார்.

"தமிழ்நாடு ஆளுநர் அரசியல் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறார். இதுகுறித்து என்னால் இந்த அமைப்பில் பேச முடியவில்லை என்றால், வேறு எங்கு பேசுவது" என்று சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கேள்வி எழுப்பினார்.

ஆயினும், ஆளுநர் குறித்து சட்டப் பேரவைத் தலைவர் பேசியது நிகழ்ச்சி குறிப்பில் பதிவாகாது என்று மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் தெரிவித்தார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் மாநாட்டிலிருந்து வெளிநடப்பு செய்தார்.





**சிவகங்கை மாவட்டம்**

சுதந்திரப் போராட்ட வீரர்கள் மருது பாண்டியர்கள் திருவுருவச் சிலைகள் அடிக்கல் நாட்டுதல்

சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச் சிலை திறப்பு

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



சுதந்திரப் போராட்ட வீரர்கள் மருது பாண்டியர்கள்



சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம்

செ.ம.தொ.இ/46/வரைகலை/2025

நாள் : 22.1.2025 புதன்கிழமை, நேரம் : காலை 10.30 மணி
இடம் : சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரி மைதானம், சிவகங்கை

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009